# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.326/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 13 (PW– 13 ) |
| பெயர் | :– | மருத்துவர் தமயந்தி ராணி |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

**2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 01 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை முதலாம் ஆண்டு பயில்கிறேன். நான் கடந்த 25.12.2017-ஆம் நாள் காலை 05.30 மணிக்கு சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர சகிச்சைப் பிரிவில் பணியில் இருந்தபோது சேலம் அழகாபுரத்தை சேர்ந்த துரைசாமி மகன் சுமார் 45 வயதுள்ள செல்வக்குமார் என்பவரை வசந்த் என்பவர் சிகிச்சைக்காக அழைத்துவந்தார். செல்வக்குமாரை நான் விசாரித்தபோது தன்னை தெரிந்த ஒரு நபர் 23.12.2017-ஆம் நாள் இரவு சுமார் 07.00 மணிக்கு தனது வீட்டிற்கு அருகில் கட்டையால் அடித்ததாக சொன்னார். அவருக்கு தலையில் 2 x 3 செ.மீ அளவில் சிராய்ப்புக் காயம் இருந்தது. நான் விபத்துத் தகவல் பதிவேடு பதிசெய்தேன். பிறகு முதலுதவி சிகிச்சை அளித்தேன். பிறகு தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்நோயாளியாக சேர்தேன். ஆனால் அவர் தொடர்ந்து சிகிச்சைப் பெறாமல் மருத்துவ ஆலோசனைக்கு மாறாக வெளியேறிவிட்டார். இந்த விபத்துத் தகவல் பதிவேடு **அ.சா.ஆ-08** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

28.12.2017-ஆம் தேதியன்று செல்வக்குமார் அதே மருத்துவமனையில் நரம்பு அறுவை சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையில் இருந்திருக்கிறார். அங்கு சண்டை விவரத்தை அவர் சொன்னதும் விபத்துத் தகவல் பதிவேடு பதிவுசெய்ய அங்கிருந்து என் பிரிவிற்கு தகவல் சொன்னார்கள். அதன்மீது அன்று மாலை 06.45 மணிக்கு மீண்டும் விபத்துத் தகவல் பதிவேடு பதிவுசெய்தேன். 23.12.2017-ஆம் நாள் இரவு மாலை 04.00 மணிக்கு தனது வீட்டிற்கு அருகில் தெரிந்த இரண்டு நபர்கள் கட்டையால் அடித்ததாக சொன்னார். இந்த விபத்துத் தகவல் பதிவேடு **அ.சா.ஆ-09** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. இதுச் சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

காவல் துறையினர் விசாரித்தபோது ஏற்கனவே செல்வக்குமார் நரம்பு அறுவை சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 28.12.2017-ஆம் தேதியன்று செல்வக்குமார் நரம்பு அறுவை சிகிச்சைப் பிரிவில் சேர்ந்தபோது auto-வில் இருந்துத் தவறி விழுந்ததாக சொல்லி சேர்ந்தார் என்றால் சரிதான்.

25.12.2017-ஆம் நாள் காலை 05.30 மணிக்கு செல்வக்குமார் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்ந்தபோது அவர் ஏற்கனவே வேறு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சைப் பெற்றாரா என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,

Additional District&Session Judge,
Salem.